# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 02 வியாழக்கிழமை 18.09.2025 கதிர் 313



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு-
Yarl Muttram
Youtube Channel







## திருமலை முத்துநகர் விவசாயிகள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம்

திருகோணமலை, செப். 18

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகள் இன்றும் இரண்டாவது நாளாக பொலிஸாரின் இடையூறுக்கு மத்தியில் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

"விவசாயிகளிடம் இருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளைநிலங்களை உடனடியாக திருப்பிக் கொடு", "இந்தியக் கம்பனிகளின் நில மற்றும் வளச் சூறையாடலுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குவோம்" போன்ற பதாதைகளை ஏந்தியவாறு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, நாளை திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ள நிலையில் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகவே இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது.

7➤

# ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்படமாட்டாதாம்

## ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது பற்றி பேச்சு நடக்கின்றதாம்



கொழும்பு, செப். 18

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்படமாட்டாது என்று அந்தக் கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும் என்பது பெரும்பாலானவர்களின் கருத்து. இதனை நாமும் ஏற்கின்றோம். இணைவு என்பது இரு தரப்புகளும் ஒரு கட்சியின் கீழ் சங்கமிப்பதா அல்லது கூட்டணியா என்பது பற்றி முடிவெடுக்கப் படவில்லை.

7➤

## தியாகி திலீபனின் நினைவேந்தல் வவுனியாவில் இன்று அனுஷ்டிப்பு



வவுனியா, செப். 18

தியாகி திலீபனின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு வவுனியா மாநகர சபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபியில் இன்று நடைபெற்றது.

இதன்போது திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

7➤

## யாழ்ப்பாணத்தில் நேற்று இடிந்து வீழ்ந்த மந்திரிமனையைப் பார்வையிட்ட சிறீதரன்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் இராச்சியத்தின் அடையாளமாக உள்ள மந்திரிமனையை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுவின் தலைவரும் நாடாளுமன்ற

7➤



## வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட மின்சார சபை ஊழியர்கள்



கொழும்பு, செப். 18

மின்சார சபையை நான்கு பங்குகளாகப் பிரிக்கும் அரசின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றும் இலங்கை மின்சார சபை பிரதான காரியாலயத்துக்கு

7➤

## ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தாருங்கள்!

### மாணவர்களின் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, செப். 18

வவுனியா வடக்கு, கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி மாணவர்களின

7➤



# மண்டைதீவு புதைகுழி விவகாரம் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு!

கொழும்பு, செப் .18

மண்டைதீவு புதைகுழி விவகாரம் தொடர்பான வழக்கு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (17) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இது தொடர்பான அறிக்கையை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவிடம் நீதிமன்றம் கோரியுள்ளது.

1991 இல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது தீவகப் பகுதியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் பொதுமக்கள், மண்டைதீவிலுள்ள சில இடங்களில் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றை சட்டரீதியாக அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு முன்னதாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில், ஊர்காவற்துறை பொலிஸார் மண்டைத்தீவு மனிதப் புதைகுழி அகழ்விற்குத் தேவையான வசதிகள் இல்லை என நீதிமன்றத்திற்கு அறிவித்ததையடுத்து, குறித்த வழக்கை யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் பாரப்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்றைய தினம் இது தொடர்பான வழக்கு மீண்டும் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மண்டைதீவு புதைகுழி விவகாரம் தொடர்பாக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு ஊர்காவற்துறை நீதவான் உத்தரவிட்டார்.

எனினும் அறிக்கை சமர்ப்பிப்பதற்குக் குற்றத்தடுப்பு பிரிவினர் கால அவகாசம் கோரினர்.

இதனையடுத்து, குறித்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் 13ஆம் திகதி நெடுந்தீவு அருகே கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களும் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போதே இவர்களது விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டது.

இவர்கள் கடந்த மாதம் 20ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின் பேரில் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது இம்மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்த நிலையில் அன்றைய தினம் வலக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் நேற்று (17) வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. நேற்று அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது இன்று வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் இன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 7 இந்திய மீனவர்களது விளக்கமறியலை எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீடித்து நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

# நண்பனைப் போத்தலால் தாக்கி நீரில் மூழ்கடித்துக் கொலை செய்த தோழன்

திஸ்ஸமஹாராம, செப். 18

திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்துங்கம பிரகதி மாவத்தை பகுதியிலுள்ள கால்வாயில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்துக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படை யில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

தனிப்பட்ட தகராறு காரணமாக உயிரிழந்தவர் அவரது நண்பனால் போத்தலொன்றால் தாக்கப்பட்டு நீரில் மூழ்கடிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 24 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகள் திஸ்ஸமஹாராம பொலி ஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# “வேலைச் செய் இன்றேல் வெளியேறு”: அமைச்சர் அதிரடி



கொழும்பு, செப் .18

ரயில்வே சேவைகளை முறையாக செயல்படுத்த முடியாத அதிகாரிகள் தங்கள் பதவிகளில் இருந்து ராஜினாமா செய்ய வேண்டும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறியுள்ளார்.

களுத்துறை மாவட்ட செயலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் போக்குவரத்து அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர், ரயில்வே துறை தனது பொறுப்புகளை புறக்கணித்து பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை கூட வழங்கத் தவறியதற்காக விமர்சித்தார்.

“ரயில்களில் ஜன்னல்களை சரியாக மூடவேண்டும். அவை சரியாக மூடப்படாத போது, இருக்கைகள் நனைந்துவிடும். எந்த மின்விசிறியும் வேலை செய்யாது. காலியில் இருந்து கொழும்புக்கு இரண்டரை மணி நேர பயணத்தில், ஒரே கழிப்பறையில் தண்ணீர் இல்லை. இவை அலுவலக ரயில்கள் - ஆனால் பயணிகள் இதுபோன்ற சூழ்நிலையில் பயணிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அதிகாரிகள் பொதுமக்கள் மீது எந்த அக்கறையும் காட்டவில்லை, ”என்று அவர் கூறினார்.

ஜா-எலாவைச் சேர்ந்த ஒரு சிறுவன் தனது முதல் ரயில் பயணத்தின் போது பழுதடைந்த ஜன்னலில் விழுந்து இரண்டு விரல்களை இழந்த சமீபத்திய சம்பவத்தையும் அமைச்சர் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார். (ஐ)

## “தொல்பொருள் சின்னங்கள் பாதுகாக்க வேண்டும்“சிறிதரன் கோரிக்கை



வடகிழக்கில் தமிழ் மக்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டது பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அனுர அரசாங்கம் இதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

வடக்கு கிழக்கில் தொல்பொருள் சின்னங்களை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுப்போம் ஸ்ரீதரன் யாழில் தெரிவிப்பு

வியாழக்கிழமை (18) அன்று காலை யாழ் நல்லூர் மந்திரி மனையை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது யாழ்ப்பாண மாவட்டத்தின் உடைய வடக்கு கிழக்கு மக்களுடைய பூர்வீக அடையாளங்களை நிலை நிறுத்துகின்ற மிக முக்கியமாக சங்கிலிய மன்னன் வாழ்ந்த காலத்தில் இருந்த மந்திரிமனை புதன்கிழமை (17) அன்று மழை காரணமாக ஒரு பகுதி இடிந்து வீழ்ந்தது.

மந்திரிமனை என்பது தமிழர்களின் வரலாற்று தொன்மையான இடம் இதனை புணரமைத்து பாதுகாக்கப்பட வேண்டிய பல முயற்சிகள் எடுத்த போதும் ஒரு சில தனி நபர்களின் நீதிமன்ற வழக்குகள் காரணமாக இழுபறி நிலையில் காணப்பட்டது.

இருந்தாலும் கூட தற்போது அவசர நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக்கட்டடத்தை மீள அமைத்து இந்த தொல்பொருள் அடையாளத்தை எங்களுடைய பூர்வீக அடையாளமாக நிலை நிறுத்துவதற்கு உரிய மிக முக்கியத்துவத்தை உணர்த்தி இருக்கின்றது

அதன் அடிப்படையில் யாழ்ப்பாண நல்லூர் பகுதியில் உள்ள மந்திரி மனையை யாழ்ப்பாணம் மாவட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டு அதற்குரிய ஆலோசனைகளை பெற்றுள்ளேன். இந்த மந்திரி மனையை பாதுகாப்பது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள உள்ளோம் என்றார். (ஐ)

## தொல்லியல் திணைக்கள விவகாரத்தால் தர்க்கம்



நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ ிற்கும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினருமான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்திக்கும் இடையில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தொல்லியல் திணைக்களம் தொடர்பில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

இவ் விவாதத்தைத் தொடர்ந்து நிலாவரையில் இருந்து தொல்லியல் திணைக்களம் விலகி பிரதேச சபையிடம் அதை கையளிக்க வேண்டும் எனவும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும், வலிகாமம் கிழக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (16) பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிலாவரை பகுதி சுற்றுலா வலயமாக உள்ளமையினால் அதை மேம்படுத்துவது பற்றி ஆராயப்பட்டது. இதன்போது இப் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தின் தலையீடுகளால் அதை முன்னேற்ற முடியாதுள்ளது என தவிசாளரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது பதிலளித்த அபிவிருத்தி குழுவின் தலைவர் ரஜீவன் பாராளுமன்ற உறுப்பினர், தொல்லியல் திணைக்களத்தினால் இப்போது பிரச்சனை கிடையாது. கடந்த கால அரசாங்கத்தில் இடம்பெற்றதுபோல தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இல்லை. நீங்கள் அரசியல் ரீதியில் குழப்பங்களை விளைவிக்க வேண்டாம். என தொடர்ந்து அரசாங்கத்தினை நியாயப்படுத்தும் வகையில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அபிவிருத்திக்குழு தலைவரின் கருத்துக்களை எதிர்த்த தவிசாளர்,தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் பௌத்த பேரினவாத அடிப்படையில் கொண்டுள்ள கட்டமைப்பிலோ ல்லது அத்திணைக்களங்களுக்கு குவிக்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்களால் அரசாங்கம் மாற்றங்களை ஏற்படுத்தாது சம காலத்தில் அத் திணைக்களங்களால் எமது மக்களுக்கு பாதிப்பு இல்லை என்று கூறக்கூடாது. எமது மக்கள் சம கால சமாளிப்புக்களை எதிர்பார்க்கவில்லை. மாறாக நிரந்தர தீர்வை எதிர்பார்க்கின்றனர்.

தங்களுடைய கட்சி பாராளுமன்றில் அறுதிப் பெரும்பான்மையுடன் உள்ளது. இந்த நிலையில் சரியா சட்ட மாற்றங்களை இலகுவாகக் கொண்டுவந்து எமது மக்களுக்கு சரியான தீர்வுகளை முன்வைக்க முடியும். இப்போது பிரச்சனைஇல்லை என்பது பதில் அல்ல. சரியான தீர்வுகளே முக்கியம் என தவிசாளரினால் வாதிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து கூட்டத்தை நிறுத்த வேண்டிவரும் என அபிவிருத்திக் குழுத் தலைவர் தவிசாளரை நோக்கி எச்சரித்தார். எனினும் தொடர்ச்சியாக வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து அபிவிருத்திக் குழுத் தலைவர் நிலாவரையில் இருந்து தொல்லியல் திணைக்களத்தை விலக்கி பிரதேச சபையின் கீழ் கொண்டு வருவதற்கான முடிவை எடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விசேட தேவையுடைய மாணவர் மனுத் தாக்கல்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (யுஜிசி) தனது இயலாமையின் அடிப்படையில் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற அனுமதி மறுத்ததால், தனது அரசியலமைப்பு உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி, பண்டாரவளையைச் சேர்ந்த ஒரு இளம் மாணவர் உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

இந்த மனுவை பண்டாரவளையைச் சேர்ந்த மனுஜய அத்தநாயக்க தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் நீதியரசர் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய இரு நீதியரசர்கள் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த வழக்கு அடுத்த ஆண்டு பிப்ரவரி 24 ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர், தான் பண்டாரவளை தர்மபால கல்லூரியில் தொழில்நுட்பப் பிரிவில் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதி பல்கலைக்கழக சேர்க்கைக்குத் தகுதி பெற்ற ஒரு மாற்றுத்திறனாளி மாணவர் என்று கூறுகிறார்.

2024ஃ2025 கல்வியாண்டிற்கான தொழில்நுட்பப் பட்டப்படிப்புக்கு விண்ணப்பித்த போதிலும், மாற்றுத்திறனாளி மாணவர்கள் பிரிவின் கீழ் அத்தகைய பட்டப்படிப்பைப் படிக்க எந்த ஏற்பாடுகளும் இல்லை என்று தனக்குத் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

யுஜிசியின் முடிவால் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்குமாறு மனுதாரர் உயர் நீதிமன்றத்தை வலியுறுத்துகிறார்.

மேலும், தொழில்நுட்பத்தில் பட்டம் பெற வாய்ப்பளிக்கும் உத்தரவை அவர் கோருகிறார், அதே நேரத்தில் மாற்றுத்திறனாளி மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர ஒரு தேசிய கொள்கையை வகுக்க வேண்டும் என்றும் கோருகிறார். (ஐ)

## உலகக் கடவுச்சீட்டு தரவரிசையில் இலங்கை 97வது இடத்தில்

2025 ஆம் ஆண்டு உலகளாவிய தரவரிசையில் இலங்கையின் கடவுச்சீட்டு ஒரு இடம் சரிந்தது கடந்த செப்டம்பர் (11) ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 97வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

குறியீட்டின் படி, இலங்கையும் ஈரானும் 97வது இடத்தைப் பகிர்ந்து கொள்கின்றது, இதன் மூலம் அதன் உரிமையாளர்களுக்கு 41 இடங்களுக்கு விசா இல்லாத அணுகலை வழங்குகிறது. 2024 ஆம் ஆண்டில் இந்த நாடுகள் 96வது இடத்தைப் பிடித்துக்கொண்டது.

உலகின் மிகவும் அதிகாரப்பூர்வ கடவுச்சீட்டு தரவரிசையாகக் கருதப்படும் ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு, முன் விசா இல்லாமல் அணுகக்கூடிய நாடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 227 இடங்களுக்கு எதிராக 199 கடவுச்சீட்டுகளை மதிப்பிடுகிறது. (ஐ)

## ட்ரோன் விட்ட மூவர் கைது

*சந்தேக நபர்கள் பலாங்கொடை, மாளிகாவத்தை மற்றும் ஜா-எல பகுதிகளைச் சேர்ந்த 23 - 32 வயதுக்குட்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது.*

*இந்த மூன்று நபர்களும் ஒரு தனியார் நிதி நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதுடன் புதன்கிழமை (17) அன்று வாகன விற்பனை ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தை நடத்தி முடித்து விட்டு, ருவன்வெலிசேயாவுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வாகன நிறுத்துமிடத்தின் அருகில் இருந்து ட்ரோன் கேமராவை பறக்க விட்டுள்ளனர்.*

*அனுமதியின்றி ட்ரோன் கேமரா பறக்கவிட்ட குற்றச்சாட்டில் ருவன்வெலிசேயா, உடமலுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக அனுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.*

*(ஐ)*

# தவெக பிரசாரத்துக்கு பாரபட்சமின்றி அனுமதி வழங்க கோரி தொடர்ந்த வழக்கில் தவெக—க்கு சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை




தவெக கூட்டத்தின்போது சேதப்படுத்திய பொது சொத்துக்களுக்கான இழப்பீட்டை வசூலிக்காவிட்டால் நீதிமன்றம் தலையிடும். பொதுச் சொத்துகள் சேதமடைந்தால் அதற்கான இழப்பீட்டை வசூலிக்கும் விதமாக ஒரு குறிப்பிட்ட தொகையை டெபாசிட் செய்யும் வகையில் விதிமுறைகள் வகுக்க வேண்டும். என்று விஜய் பிரசாரத்துக்கு பாரபட்சமின்றி அனுமதி வழங்க கோரி த.வெ.க. தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை ஐகோர்ட்டில், தமிழக வெற்றிக் கழகத்தின் துணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், “த.வெ.க. தலைவர் விஜய் கடந்த 13-ந் தேதி திருச்சியில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார். அதைத் தொடர்ந்து வருகிற 20-ந் தேதி முதல் டிசம்பர் 20-ம் தேதி வரை மாநிலம் முழுவதும் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

திருச்சியில் நடந்த பிரசாரத்தின் போது போலீஸ் தரப்பில் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் முறையாக பின்பற்றப்பட்டன. தமிழ்நாட்டில் ஆளுங்கட்சி உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டங்கள், போராட்டங்கள், ரோடு ஷோ போன்றவைகளுக்கு கடுமையான நிபந்தனைகள் விதிப்பது இல்லை.

ஆனால், எங்களது கட்சிக்கு மட்டும் போலீசார் கடுமையான நிபந்தனைகள் விதிக்கின்றனர். எனவே, விஜய் மேற்கொள்ளும் பிரசாரத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் மனுக்களை பாரபட்சமின்றி பரிசீலித்து அனுமதி வழங்க மாநிலம் முழுவதும் உள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடும்படி டி.ஜி.பி.க்கு ஆணையிட வேண்டும்” என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் தவெக பிரச்சாரத்துக்கு அனுமதி வழங்குகையில், பாரபட்சமாக நிபந்தனைகள் வழங்கப்படுவது குறித்தும், அனுமதி வழங்கப்படாதது குறித்தும் தவெக தொடர்ந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. முப்பெரும் விழாவில் முதல்வர் ரோட் ஷோ நடத்தியதையும், அவருக்கு பட்டாசுகளோடு வரவேற்பு வழங்கியது குறித்து தவெக தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

அனைத்து கட்சிகளையும் சமமாக நடத்த வேண்டும். ஏன் இந்த பாரபட்சம்”

என்று அரசுத் தரப்பை பார்த்து நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. அனைத்து கட்சிகளுக்கும் பொருந்தும் வகையில் விதிகள் வகுக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது

“நிபந்தனைகள் அனைத்துக் கட்சிகளுக்கும் விதிக்கப்படுவதுதானே? தலைவராக இருக்கும் நீங்கள்தான் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். தொண்டர்கள் உயரமான இடங்களில் ஏறி நின்று, ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் யார் பொறுப்பு?” முழுமையாக போக்குவரத்து முடங்கினால் மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா? யாரும் சட்டத்துக்கு மேலானவர்கள் அல்ல, பொதுக்கூட்டம் நடத்தினாலும் சட்டத்துக்கு உட்பட்டு நடத்த வேண்டும். விஜய் பரப்புரைக்கு பாரபட்சமின்றி அனுமதி வழங்கக்கோரி த.வெ.க. தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்றம் சரமாரி கேள்வி கேட்டுள்ளது. (ஐ)

# விரைவில் டிடிவி தினகரனை சந்திக்க இருக்கிறேன்: அண்ணாமலை பேட்டி



விரைவில் டிடிவி தினகரனை சந்திக்க இருக்கிறேன்என அண்ணாமலை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை எனக்கு டெங்கு காய்ச்சல் இருந்ததால், பாஜக தேசிய அமைப்பு பொதுச்செயலாளர் பி.எல்.சந்தோஷ் வீட்டுக்கு வந்து என்னை சந்தித்தார். கட்சியின் சில நிகழ்ச்சிகளுக்கு வரவில்லை என்றால், நான் அதிருப்தியில் இருப்பதாக கூறுகின்றனர். பாஜகவின் பெருமைமிகு தொண்டனாக நான் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

விவசாய நிலம் வாங்கினால் கூட விளக்கம் அளிக்க வேண்டியுள்ளது. ரூ.3.50 கோடி கடன் வாங்கியுள்ளேன். கடனுக்கு வட்டி செலுத்தி வருகிறேன். தமிழ்நாட்டில் நான் தான் இளிச்சவாயன் என் சொந்த சம்பாத்தியத்துக்கும் நான் கணக்கு காட்ட வேண்டி உள்ளது. நாங்கள் மட்டும்தான் எங்கள் நேர்மையை நிரூபித்துக் கொண்டிருக்க வேண்டியுள்ளது காமராஜர் ஐயா நிரூபிக்க வேண்டும். அவரது கால் தூசிக்கு சமமான நானும் நிரூபிக்க வேண்டும். ஆனால் மற்றவர்கள் யாரும் நிரூபிக்க மாட்டார்கள். இதுதான் தமிழ்நாடு அரசியலின் துரதிஷ்டம்.

நாங்கள் நேர்மையாக இருப்பதால், யாரும் சொல்வதற்கு முன்பே இதயத்தை திறந்து காட்டுகிறோம். தமிழ்நாட்டில் ஒருநாள் வரும்... அப்போது யார் அரசியலுக்கு வந்தாலும், அவர்கள் திறந்த கண்ணாடியாக இருக்க வேண்டியிருக்கும். ஓ.பன்னீர்செல்வம், தினகரனை கூட்டணியில் சேர்ப்பது குறித்து தேசிய தலைமை முடிவு செய்வார்கள். தேஜ கூட்டணியிலிருந்து டிடிவி விலகியது அவரது சொந்த முடிவு. அவருடன் சில நாள்கள் முன்பு பேசினேன். விரைவில் அவரை சந்திக்கவுள்ளேன். என்.டி.ஏ.வில் இருந்து வெளியேறிய தினகரனை நேரில் சந்தித்து வலியுறுத்துவேன்.

பாஜக கஷ்டத்தில் இருந்தபோது டிடிவி தினகரன், ஓபிஎஸ் ஆதரவாக இருந்தார்கள் அவர்களோடு அரசியலைத்தாண்டி என் நட்பு தொடரும். ஒரு கூட்டணியில் எவ்வளவு தலைவர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு சந்தோஷம். ஜெயலலிதா மறைவுக்குப்பின் அதிமுக ஆட்சியை பாஜக காப்பாற்றியதாக ஈபிஎஸ் கூறியது சரித்திர உண்மை. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சந்திப்பது எல்லோருக்குமே தெரியும் இபிஎஸ் முகத்தை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் முகத்தை மறைத்ததாக நான் பார்க்கவில்லை, குழலவயபகல் அப்படி தெரிந்திருக்கிறது என்று கூறினார். (ஐ)

# ‘பாகிஸ்தான் – சவுதி அரேபியா பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஆய்வு செய்கிறோம்!’



பாகிஸ்தான் - சவுதி அரேபியா பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து வருவதாக இந்திய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் மற்றும் சவுதி அரேபியா இடையே பாதுகாப்பு கூட்டாண்மையை வலுப்படுத்தும் வகையில் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானதாக பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், இரு நாடுகளில் ஒன்றின் மீது தாக்குதல் நடந்தால், அது இரு நாடுகள் மீதான தாக்குதலாகக் கருதப்படும் என்றும் இரு நாடுகளும் இணைந்து பதிலடி கொடுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. பாகிஸ்தான் - சவுதி அரேபியா ஆகிய இருநாடுகளும் யேவுழு அமைப்பு போன்ற பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளதால், இந்த ஒப்பந்தம் சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில், “சவுதி அரேபியா - பாகிஸ்தான் இடையே முக்கிய பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானதாக செய்திகள் வந்துள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக இந்த ஒப்பந்தத்தை முறைப்படுத்துவது பரிசீலனையில் இருந்தது. இந்த ஒப்பந்தத்தால் நமது நாட்டின் பாதுகாப்புக்கும், பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மைக்கும் எவ்வாறு தாக்கம் ஏற்படும் என்பதை ஆய்வு செய்கிறோம். நாட்டின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதையும், அனைத்து களங்களிலும் விரிவான தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்வோம்.,” எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இந்தாண்டு டிசம்பர் மாத இறுதிக்குள், ஆளில்லா ராக்கெட்டை அனுப்ப திட்டம் :இஸ்ரோ தலைவர் நாராயணன் அறிவிப்பு



விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தில் 85 சதவீத சோதனைகள் நிறைவு பெற்றுள்ளதாக இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறினார்.கோவையில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இஸ்ரோ தலைவர் நாராயணன் விமானம் மூலம் இன்று காலை கோவைக்கு வந்தார். விமான நிலையத்தில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: கடந்த 2018ம் ஆண்டு பிரதமர் மோடி அறிவித்த விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்த ஆண்டு டிசம்பர் மாதம் விண்வெளிக்கு ஆளில்லாத ராக்கெட் அனுப்ப திட்டமிட்டுள்ளது. அதில் வயோமித்ரா என்ற இயந்திர மனிதனை அனுப்ப உள்ளோம். டிசம்பர் மாதம் இறுதியில் அது நடைபெறும். இது முடிந்தவுடன் 2 ஆளில்லா ராக்கெட்களை அனுப்ப உள்ளோம்.

2027ம் ஆண்டு மார்ச் மாதம் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளோம். ககன்யான் திட்டத்தில் 85 சதவீத சோதனைகள் நிறைவு பெற்றுள்ளது. மனிதர்களை அனுப்புவதற்கு பல்வேறு கட்ட சோதனைகள் மேற்கொள்ள வேண்டும். ராக்கெட்டில் விபத்து நடந்தால் மனிதர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதையும் ஆய்வு செய்து வருகிறோம். இதில் இஸ்ரோ மட்டுமல்லாமல் ஏரோ, நேவி உள்ளிட்ட பலரும் பங்கேற்கின்றனர். விண்வெளித்துறையில் உலகத்தில் 9 இடங்களில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம்.

நிலாவில் இருக்கக்கூடிய கேமராவில் சிறந்த கேமரா நமது நாட்டுடையது. செவ்வாய் கிரகத்துக்கு ராக்கெட் அனுப்புவதிலும் வெற்றி அடைந்த முதல் நாடு இந்தியாதான். ராக்கெட் இன்ஜினிலும் சாதனைகளை படைத்துள்ளோம். ஏஐ தொழில்நுட்பம் விண்வெளித் துறையிலும் வந்துவிட்டது. வயோமித்ரா என்பதும் ஏஐ டெக்னாலஜிதான். சந்திராயன்-4 நிலாவில் மாதிரிகளை எடுத்து வருவதிலும் ஏஐ ரோபோ தொழில்நுட்பத்தை பயன்படுத்த போகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.(ஐ)



# கேட்ட வார்த்தைகளும் கேள்விக்குறியாகும் பழக்கங்களும்!

ஆண்களே! நீங்கள் நலமாக இருக்கிறீர்களா? உள்ளுக்குள் எந்தவித பதைபதைப்பும் இல்லாமல் உள்ளபடியே நலமாக இருக்கிறீர்கள்தானே? ஆம் எனில் மகிழ்ச்சி.

பெண்களாகிய நாங்கள் இப்போது நலமாக இல்லை. 'இப்போது' என்று குறிப்பிடக் காரணம் இந்த காலகட்டத்தைக் குறித்துதான். தொழில்நுட்பமும் அறிவியலும் இவ்வளவு முன்னேறி இருக்கிற இந்தக் காலகட்டத்திலும் நாங்கள் நிறைவான மகிழ்ச்சியாக இல்லை. பாதுகாப்பு உணர்வோடு இல்லை. எந்த நேரத்திலும் நாம் வயதுபேதம் பார்க்கப்படாமல் எவரோ ஒருவரால் தாக்கப்படலாம் அல்லது நமக்கு ஏதேனும் பிரச்சனை வரலாம் என்று தோன்றுகிறது. பார்க்கிற அத்தனை செய்திகளும் மனிதர்கள் மீதான நம்பிக்கையையும் மதிப்புகளையும் முற்றிலுமாக மாற்றிவிடுகின்றன. உறவுகளின் மீதான உறவுமுறைச் சொற்களின் மீதான நம்பிக்கை சிதைந்துள்ளது. உறவுமுறை கடந்து வெறும் எதிர்ப்பாலினத்தவராக மட்டுமே பார்க்கிற பார்வை அதிகரித்துள்ளது.

நன்கு படித்து, நல்ல பணியில் இருக்கிற பெண்களுக்குமே சக ஆண்களை எதிர்கொள்ள அச்சமும் பதட்டமுமாக இருக்கிறது. அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் துணிந்தவர்போல் நிமிர்ந்து செல்கிறோம். அவ்வளவே.

நன்றாக நிம்மதியாக ஆழ்ந்த உறக்கத்துக்கு மனம் சென்று பல நாள்கள் ஆகிவிட்டதாகப் பல தோழிகள் சொல்வதைக் கேட்க முடிகிறது. வீட்டிலேயே இருந்தாலும் ஒருவித பாதுகாப்பின்மையை மனம் உணர்கிறது.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஆண்பிள்ளைகள் பலரும் போதைப் பொருள்களை நுகரத் தொடங்கியுள்ளனர். பதின்களின் பிற்பகுதியில் வரக்கூடிய தீய பழக்கங்கள் பலவும் இப்போது பத்துவயதுக்கு உள்ளாகவே வந்துவிடுகிறது. சிகிரெட் போன்றவையெல்லாம் ஒன்றுமே இல்லை எனும் அளவுக்கு பிள்ளைகள் மத்தியில் போதைப்பழக்கம் பெருகியுள்ளது. இவைதான் என்று சொல்லிவிட முடியாத அளவுக்கு விதவிதமான பொருள்களை போதைக்காகப் பயன்படுத்துகின்றனர்.



சும்மா முயற்சி செய்து பார்க்கலாமே என்பதற்காகவும் நண்பர்களின் வற்புறுத்தலாலும் பல பிள்ளைகளுக்கு நம் கற்பனைக்கே எட்டாத பழக்கங்கள் வந்துள்ளன. இவற்றை எதிர்த்து வெளியே பேசவும் எழுதவும் முடிவதில்லை. இதுகுறித்துத் தொடர்ந்து இயங்குகிறவர்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வருகின்றன.

'எல்லாவற்றையும் ஒரே நாளில் நிறுத்த வேண்டும்' என்பதெல்லாம் சினிமாக்களுக்கு நன்றாக இருக்கலாம். ஆனால் நடைமுறையில் நம் கையில் இருக்கிற வாய்ப்பை விட்டுவிட்டு, யாரோ வந்து மாற்றட்டும் என எதிர்பார்ப்பது நியாயமல்ல. மாற்றத்தை நம்மைச் சுற்றி நாமே தொடங்க முயற்சிப்போம்.

பிள்ளைகளின் உணவுப் பழக்கத்தையும் நட்பு வட்டத்தையும் கவனியுங்கள். எந்நேரமும் கைபேசி உலகிலேயே வாழும் பிள்ளைகளின் நடவடிக்கைகளில் மாற்றம் தெரிந்தால் அதுகுறித்து நிதானமாக அவர்களிடமே பேசுங்கள். அதட்டாமல் அழுது பெரிதாக்கி மிகைப்படுத்தாமல் நிதானமாகக் கேளுங்கள்.

அவர்களின் பதில்களை ஏற்றுக்கொள்ளுங்கள். எல்லாவற்றுக்கும் உடனே பதில் சொல்லவேண்டும் என்றில்லை. ஆனால் எல்லாவற்றையும் கேளுங்கள்.

'அவர்கள்' 'இவர்கள்' என்று சொல்லாமல் யாரையேனும் பள்ளிப் பருவத்தில் 'அவன் ' என்று சொன்னாலேகூட அம்மாவும் அப்பாவும் முறைப்பார்கள். ஆனால் இப்போது அவ்வளவு இயல்பாகக் கெட்ட வார்த்தைகள் பிள்ளைகள் மத்தியில் புழங்கப்படுகிறது. கெட்ட வார்த்தைகள் 'கேட்ட' வார்த்தைகள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் கேட்ட வார்த்தைகளையே பேசுகிறார்கள். அப்படியெனில் அது அவர்கள் வீட்டிலும் நட்பு வட்டத்திலும் அவர்கள் அன்றாடம் எதிர்கொள்ள சூழலில் உள்ளவர்களால் ஏதோ ஒரு நேரத்தில் சொல்லப்படுகிறது. பிள்ளைகள் வளர வளர நாம் பேசும் கெட்ட வார்த்தைகளின் எண்ணிக்கையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கத் தொடங்க வேண்டும். பேசுகிற சொற்களில் பலவும் பெண்களை இழிவுபடுத்தியே உருவாக்கப்பட்டுள்ளன. எங்கோ எவரோ அழுத்தமாகச் சொன்ன கெட்ட வார்த்தையைக் கேட்டு வந்த பிள்ளைகள் அதே சொற்களை அதே அழுத்தம் குறையாமல் சக மாணவரிடம் சண்டையின்போது சொல்கிறார்கள்.

'அம்மாவைப் பற்றித் தப்பாக பேசுகிறான்' என ஒருவரை ஒருவர் அடித்து மீள்வதைக் கையாள்வதே வகுப்பில் சிரமமாக இருக்கிறது.

அப்பாக்களும் அண்ணன்களும் நண்பர்களும் உங்களுடன் இருக்கும் சக ஆண்களைக் கவனியுங்கள். விளையாட்டாகத் தொடங்கிய ஏதோ ஒரு பழக்கம்தான் ஒருவரது வாழ்வையே மாற்றிவிடுகிறது. அது உங்கள் கண்முன் நடக்கும்போது கடந்துபோகாதீர்கள். கொஞ்சம் அக்கறையோடு உடனிருப்போரிடம் பேசுங்கள். 'கூல் லிப்' போன்ற போதைப்பொருளின் அறிமுகம் இல்லாத பதின் வயதுப் பிள்ளைகளே குறைவு எனலாம். அந்த அளவிற்குப் பிள்ளைகளின் கைகளுக்கு அவை எளிதாகக் கிடைக்கின்றன.

தந்தைபோல் அறத்தையும் நல்லதையும் கற்றுத்தருகிற சிறந்த தோழன் வேறுயாரும் இருக்கமுடியாது. எந்நேரமும் அறிவுரை சொல்கிற அம்மாக்களின் குரல்களைவிட எப்போதாவது தோள்மீது கைபோட்டுப் பேசும் அப்பாக்களின் குரல்களுக்கு வலிமை அதிகம். பிள்ளைகளின் முதல் ஹீரோ நீங்கள்தான். அதனால் உங்களை முதலில் நீங்கள் மதியுங்கள். உங்கள் பழக்கவழக்கங்களை ஒழுங்கு படுத்துங்கள்.

முந்தைய நாள் இரவு வீட்டில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை. கோபித்துக்கொண்டு அப்பா வீட்டைவிட்டுச் சென்று விட்டார். திரும்பவில்லை. கலங்கிய கண்களுடன் மறுநாள் காலைஉணவுகூட உண்ணாமல் அப்பாவை எண்ணிக் கலங்குகிற பிள்ளைகளை வகுப்பறைகளின் சுவர்கள் கவலையோடு பார்க்கின்றன. இந்த மனநிலையோடு பள்ளிக்கு வருகிற பிள்ளைகள் எப்படிக் கவனிப்பார்கள்? எதைக் கற்பார்கள்?


சண்டைகளும் பிணக்குகளும் இயல்புதான். ஆனால் உறவின் பிடிப்பு அறுபடும் அளவுக்கு சிறிய விஷயங்களுக்கே உச்சபட்ச நிலைக்குச் செல்வது குழந்தைகளின் ஆளுமையைப் பாதிக்கும் என்பதைத் தயவுசெய்து மனத்தில் வையுங்கள்.

சண்டையின்போது குரல் உயர்த்தாத் சாப்பாட்டுத் தட்டினைத் தூக்கி எறியாத் கோபத்தில் கெட்ட வார்த்தைகள் பேசிடாத் தீய பழக்கங்களுக்கு ஆட்படாத் பிறரை ஏமாற்றாத ஒரு நபராக ஓர் அப்பா இருந்துவிட்டால் அவரைப் பார்த்து வளர்கிற அவரது பிள்ளை எவ்வளவு நம்பிக்கை உணர்வைப் பெறக்கூடும் என்பதைச் சிந்தியுங்கள்.

வீட்டில் அம்மாவும் அப்பாவும் வேலையைப் பகிர்ந்து செய்வதைப் பார்த்து வளர்கிற ஆண்பிள்ளைகள் பெண்களை மதிக்க வேண்டும் என்பதை அப்பாவின் நடத்தைவழி கற்கின்றனர். அது அவர்களுக்குச் சொல்லாக அல்லாமல் செயலாக நினைவில் நிற்கும்.

வரதட்சணை வாங்குவதை இழிவென நினைக்கிற அப்பாக்களைப் பார்க்கிற பிள்ளைகள் எத்தனை பெரும் நம்பிக்கையுடனும் மதிப்புடனும் வளர்வார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்.

அன்புள்ள அப்பாக்களே! உங்கள் பிள்ளைகளைக் கவனியுங்கள். அவர்களோடு உரையாடல் நிகழ்த்துங்கள். மதிப்பெண், வகுப்புகள், பாடங்கள் கடந்து வாழ்க்கை குறித்துப் பேசுங்கள். சக பெண்ணை வகுப்பிலும் வேலையிலும் வாழ்விலும் எப்படி நடத்த வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்.



பெண் பிள்ளைகளின் அப்பாக்கள் கண்காளிப்பாளராக இல்லாமல் கொஞ்சம் கனிவோடு இருங்கள். 'கொஞ்சம் சலுகை கொடுத்தால் உடனே மகள் நம்மை ஏமாற்றிவிடுவாள். அதனால் கடுமையாகவே இருப்போம்' என்கிற பழைய பொய்க்கதைகளை நம்பி ஏமாறாதீர்கள். அவள் உங்கள் மகள். அவளை நீங்கள் நம்பாவிட்டால் வேறு யார் நம்புவார்கள்? அவளுக்கு நீங்கள் தைரியத்தைப் பழக்காவிட்டால் வேறு யார் பழக்குவார்கள்? வேலையிலோ திருமண வாழ்விலோ ஏதேனும் தவறு நேர்ந்துவிட்டால் அதுமட்டுமே வாழ்வல்ல என்பதைச் சொல்லிச் சொல்லி பிள்ளைகளை வளர்த்திடுங்கள்.

கல்வியையும் துணிவையும்விட வேறு எந்த சிறந்த சொத்தை நம் பிள்ளைகளுக்குக் நம்மால் கொடுத்திட முடியும்?

எதையும் எதிர்கொள்ளும் உறுதியோடு பெண்பிள்ளையையும் எவருக்கும் இடையூறு செய்யாத ஆண்பிள்ளையையும் வளர்த்திட அப்பா எனும் மனிதரின் பங்கு இங்கு மிகத் தேவை. அதைப் புரிந்து செயல்படுங்கள்.

'பிள்ளைக்காகவே உழைக்கிறேன் பிள்ளைக்காகவே ஓடுகிறேன்' என நீங்கள் ஓயாது ஓடினால் தந்தையாக நீங்கள் செய்ய வேண்டியதை எப்போது செய்வது. அதற்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள். ஓடுவதும் ஓயாது உழைப்பதும் அவையத்து முந்தி இருப்பச் செய்யத்தானே! அதைத் தவறாது செய்யுங்கள். பேசுவோம்.

# காசாவில் இருந்து மக்கள் வெளியேறலாம்: 48 மணி நேர பாதையை திறந்தது இஸ்ரேல்



இஸ்ரேல் ராணுவம் காசாவில் தரைவழித் தாக்குதலை நடத்தி வரும் நிலையில், அப்பாவி பொதுமக்கள் நகரத்தை விட்டு வெளியேற அனுமதிக்கும் வகையில் தற்காலிக போக்குவரத்து பாதை திறக்கப்பட்டுள்ளது.

மேற்கா சிய நாடான இஸ்ரேல் மீது காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் பயங்கரவாதிகள், கடந்த 2023ல் திடீர் தாக்குதல் நடத்தினர். இதைத்தொடர்ந்து, ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல், காசா மீதான தாக்குதலைத் தொடங்கியது.

ஹமாஸ் பயங்கரவாதிகளை அடியோடு ஒழிக்கும் வரை போரை நிறுத்தப்போவதில்லை என்று இஸ்ரேல் திட்டவட்டமாக கூறி வருகிறது.

இதன்படி, இஸ்ரேல் ராணுவம் காசா நகரை கட்டுப்பாட்டில் எடுக்கும் நோக்கில் தரை வழி தாக்குதலை மீண்டும் தொடங்கியுள்ளது. காசா நகரில், 3,000 ஹமாஸ் பயங்கரவாதிகள் இருப்பதாக இஸ்ரேல் ராணுவத்தினர் சந்தேகிக்கின்றனர்.

அந்த சாலையில் கடுமையான நெரிசல் ஏற்பட்டுள்ளதால் நீண்ட வரிசையில் வாகனங்கள் ஊர்ந்து செல்கின்றன. இதனால், சலா அல்-தின் சாலை வழியாக பொதுமக்கள் வெளியேறலாம் என இஸ்ரேல் அறிவித்துள்ளது. இந்த பாதை 48 மணி நேரம் மட்டுமே திறந்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் வான்வழி தாக்குதல்கள் தொடரும் நிலையில், பல குடும்பங்கள் வெளியேற முடியாமல் சாலையோரங்களில் சிக்கித் தவிக்கின்றன.

இஸ்ரேலின் இந்த தாக்குதல் நடவடிக்கையை ஐ.நா., மனித உரிமைகள் ஆணையமும், ஜெர்மன், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளும் கடுமையாக கண்டித்துள்ளன. (ஐ)

## ஆப்கனில் பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கக்கூடாது: ஐநாவில் இந்தியா வலியுறுத்தல்




"ஆப்கானிஸ்தானில் லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகம்மது ஆகிய இரண்டு பயங்கரவாத அமைப்புகள் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கக்கூடாது" என ஐநாவில் உலக நாடுகளுக்கு இந்தியா வலியுறுத்தி உள்ளது.

ஐநாவில் நடந்த கூட்டத்தில் இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி ஹரிஷ் பேசியதாவது: ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு நிலைமையை இந்தியா உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. ஆப்கானிஸ்தானில் லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகம்மது ஆகிய இரண்டு பயங்கரவாத அமைப்புகள் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. போரினால் பாதிக்கப்பட்ட நாட்டில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில் இந்தியாவுக்கு மிகப்பெரிய ஆர்வம் உள்ளது. ஏப்ரல் 22ம் தேதி பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் தரப்பு கடுமையாக கண்டனம் தெரிவித்ததை வரவேற்கிறோம். கடந்த மாத பேரழிவு தரும் பூகம்பத்திலிருந்து நாடு மீண்டு வருவதால், வறுமை, நோய் மற்றும் பசியின் பிடியில் தவிக்கும் மில்லியன் கணக்கான ஆப்கானியர்களுக்கு இரக்கம் காட்டவும் உதவிக்கரம் நீட்டவும் வேண்டும்.

பூகம்பத்திற்குப் பிறகு, மனிதாபிமான உதவிகளை வழங்கிய முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு 15 டன் உணவுப் பொருட்களை வழங்கியது. அத்தியாவசிய மருந்துகள், சுகாதாரப் பெட்டிகள், போர்வைகள் மற்றும் ஜெனரேட்டர்கள் உட்பட கூடுதலாக 21 டன் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டன. அமைதியான மற்றும் வளமான ஆப்கானிஸ்தானை உருவாக்க சர்வதேச சமூகத்தின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்போம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## தங்க மாதிரிகள் திருட்டு: பாரீஸ் அருங்காட்சியகத்தில் அதிர்ச்சி

பாரிஸின் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் 5 கோடியே 84 லட்சத்து 71 ஆயிரம் (6 லட்சம் யூரோ)(கூ700,000) ரூபாய் மதிப்புள்ள தங்க மாதிரிகள் திருடப்பட்டுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரீஸ ில் இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் செயல்பட்டு வருகிறது. இது பொதுமக்கள், சுற்றுலாப்பயணிகளுக்கு பிடித்த இடமாக இருந்து வருகிறது.


இந்த வரலாற்று அருங்காட்சியகம் டைனோசர் எலும்புக்கூடுகள் மற்றும் டாக்ஸிடெர்மி காட்சிகளுக்குப் பெயர் பெற்றது. மேலும் இது புவியியல் மற்றும் கனிமவியல் காட்சியகத்தையும் கொண்டுள்ளது.

பல்வேறு இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட பல பூர்வீக தங்க மாதிரிகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளன. இங்கிருந்த பூர்வீக தங்க மாதிரிகள் நேற்று திருடப்பட்டுள்ளதாக இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் தெரிவித்துள்ளது. இது, 5 கோடியே 84 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டிருந்தாலும், அவை அளவிட முடியாத பாரம்பரிய மதிப்பு கொண்டவை ஆகும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் நடந்த சைபர் தாக்குதலில் அருங்காட்சியகத்தின் எச்சரிக்கை மணி மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் செயலிழந்தது.

திருடர்கள் இந்த பலவீனத்தை பயன்படுத்திக் கொண்டதாகத் தெரிகிறது. மத்திய பிரான்சின் லிமோஜஸில் உள்ள அட்ரியன் டுபூச் தேசிய அருங்காட்சியகம் இந்த மாத தொடக்கத்தில் மர்ம நபர்களால் உடைக்கப்பட்டது. அந்த சம்பவமே இன்னும் புதிராக உள்ள நிலையில் தற்போது இந்த சம்பவம் நடந்துள்ளது.

## அமேசான் காடுகள் அழிப்புக்கு எதிராக குரல் எழுப்பிய 2,250 சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மர்ம மரணம்



அமேசான் காடுகள் அழிப்புக்கு எதிராக குரல் எழுப்பிய 2,253 சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மர்மமான முறையில் இறந்துள்ளனர் என குளோபல் விட்னஸ் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக பிரேசிலில் 365 பேர், கொலம்பியாவில் 250 பேர் மர்ம மரணமடைந்துள்ளனர். பூமியின் நுரையீரல் எனப்படும் அமேசான் காடுகளில் இருந்து 60,000 கோடி டன் ஆக்சிஜன் வெளியேற்றப்படுகிறது. (ஐ)

## பயங்கரவாத அமைப்புக்கு நிதியளிப்பவர்களிடம் விசாரணை: டிரம்ப் கடுமையான எச்சரிக்கை




ஆன்டிபா (Antifa) பயங்கரவாத அமைப்புக்கு நிதியளிப்பவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தனது நெருங்கிய உதவியாளரும், வலதுசாரி அரசியல் ஆர்வலருமான சார்லி கிர்க் படுகொலை செய்யப்பட்ட சில நாட்களுக்கு பிறகு, தீவிர இடதுசாரி பாசிச எதிர்ப்பு இயக்கமான ஆன்டிபாவை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தார். இது குறித்து அதிபர் டிரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

எங்கள் பல அமெரிக்க தேசபக்தர்களுக்காக, நான் ஆன்டிபாவை பயங்கரவாத அமைப்பாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஆன்டிபா (யுவெகைய) பயங்கரவாத அமைப்புக்கு நிதியளிப்பவர்களிடம் சட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப விசாரணை நடத்தப்படும். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)

## தியாகி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யபட்ட இந்த நிகழ்வில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர், வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், மாநகர சபை உறுப்பினர் தர்மரத்தினம், வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சுரேஷ் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இந்தப் பகுதியில் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை திலீபனுக்கான அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 25ஆம் திகதி காலை முதல் ஒருநாள் அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழு தீர்மானித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் இன்று பார்வையிட்டார்

தமிழ் இராச்சிய வரலாற்றில் மிகப் பிந்திய அடையாளமாக உள்ள மந்திரிமனை அழிந்து போனால் தமிழர் வரலாறும் அழிக்கப்படும் அபாயம் உள்ளதாக வருகை தந்த அதிகாரிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

ஜமுனா ஏரி, மந்திரிமனை, சங்கிலியன் முகப்பு என்பன யாழ்ப்பாணம் மண்ணின் தமிழர் வரலாற்றின் முக்கியத்துவம் மிக்க பகுதிகள் எனவும், அவற்றைத் தொடர்ந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற உறுப்பினருடன் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பந்துல ஜீவ, புனர்நிர்மாண உத்தியோகத்தர் கபிலன், யாழ். நல்லூர் வலயத்தின் உத்தியோகத்தர் மணிமாறன், கனியவள அளவையியலாளர் அமர்நாத், யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் ஆகியோர் இதன்போது உடனிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று பெய்த மழை காரணமாக தொல்பொருள் சின்னமான மந்திரிமனையின் ஒரு பக்கம் இடிந்து விழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றோர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

“ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக பல தடவைகள் வலயக் கல்விப் பணிமனை மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ஆசிரியர் பற்றாக்குறையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நிவர்த்தி செய்து தர வேண்டும்.” - என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, விரைவில் இந்தப் பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் என்று உறுதியளித்தார்.

## வீதியை மறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்பாகக் கொட்டும் மழையிலும் மின்சார சபை தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளன.

வீதியை மறித்து நூற்றுக்கணக்கான மின்சார சபை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் காலி வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மின்சார சபையை நான்கு பங்குகளாகப் பிரிக்கும் அரசின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார சபை தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கை இன்றும் இரண்டாவது நாளாக இடம்பெற்றது.

இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள மின்சார சபை கிளைகளில் நிலவிய ஊழியர் பற்றாக்குறையால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் மாத்திரமே பயனர்களுக்கு வழங்கப்பட்டது.

அத்தோடு மின்சார சபை ஊழியர்களின் வரப்பிரசாதங்களை குறைக்கும் அரசின் தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு தெரிவித்து இன்றும் மின்சார சபை ஊழியர்கள் கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபை பிரதான காரியாலயத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்சார சபை ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த சலுகை மற்றும் கொடுப்பனவை மீள வழங்குமாறு இலங்கை மின்சார சபை அனைத்து தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அரசை வலியுறுத்தினர்.

முற்பகல் 11.30 மணியளவில் நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் மின்சார சபைக்கு முன்பாக கூடியிருந்ததுடன், பாதையின் இருமருங்கிலும் போராட்டக்காரர்கள் குவிந்தும் வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் காலி வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததுடன் சில மணிநேரத்துக்கு போக்குவரத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும், போக்குவரத்தைச் சீர்செய்வதற்காகவும் பெருமளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் போராட்டக்களத்துக்கு வரவழைக்கப்பட்டனர். இதேவேளை மின்சார சபை தொழிற்சங்கங்களின் போராட்டம் தொடர்பில் இலங்கை மின்சார சபை சுதந்திர ஊழியர் சங்கத்தின் செயலாளர் பிரபாத் பிரியந்த குறிப்பிடுகையில்,

“எமது தொழிற்சங்க நடவடிக்கையின் பிரகாரம் இன்றும் 10 ஆயிரத்துக்கும் அதிகளவான மின்சார சபை ஊழியர்கள் சுகயீன விடுமுறை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நேற்றும் இன்றும் மழையில் நனைந்தபடி போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். மின் பயனர்களை அசௌகரியத்துக்கு ஆளாக்காது பேச்சுவார்த்தையினூடாக இதற்குத் தீர்வு காணுமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். ஜனாதிபதி நேற்று நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மின்சார ஊழியர்களைக் கண்டித்திருந்தார். இந்தப் பிரச்சினையை முறையாகப் புரிந்துகொள்ளாமல் அரச தரப்பினர் வேறு கோணத்தில் அணுகுகின்றனர். எவ்வாறெனினும் எமது கோரிக்கைகளுக்கு உரிய தரப்பினர் கவனத்தில் கொள்ளாத பட்சத்தில் எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் பாரிய தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.” - என்றார்.

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில், பொலிஸார் போராட்டக்காரர்களின் இடத்தை அகற்ற முற்பட்டபோதும்கூட அவர்களால் அதனை அகற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சூரிய மின் சக்திக்கு வழங்கப்பட்ட விவசாயக் காணிகளை மீளப் பெற்றுத் தருமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருமித்த கருத்துடைய இரு தரப்புகளின் ஒற்றுமை என்பது மிக முக்கியம். பிரிந்திருந்ததால்தான் ஜனாதிபதித் தேர்தலில் எமக்குப் பின்னடைவு ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியில் கீழ்மட்ட அரசியல் இயந்திரம் வலுவிழந்துள்ளது. அந்தக் கட்சி ஆதரவாளர்களில் 99 சதவீதம் பேர் ஐக்கிய மக்கள் சக்தியுடன்தான் இருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க எமது அரசியல் குரு. அவர் கைது செய்யப்பட்டபோது நாம் கவலை அடைந்தோம். அதற்கு எதிராகக் குரல் கொடுத்தோம்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்பட மாட்டாது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது பற்றி பேசப்பட்டு வருகின்றது.” - என்றார்.

## பெக்கோ சமனின் மனைவி ஷாதிகாவுக்கு விளக்கமறியல் காலம் நீடிப்பு!

பெக்கோ சமனின் மனைவி ஷாதிகா லக்ஷானியை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெக்கோ சமனின் மனைவி ஷாதிகா லக்ஷானி இன்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சந்தேக நபரின் சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்தார். அத்துடன் அன்றைய தினம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பணிப்பாளரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தண்டிக்கப்படாததே காஸா மீறல்களுக்கும் காரணம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

கொழும்பு, செப். 18

“16 வருடங்களுக்கு முன்னர் நடந்த மீறல்களுக்காக இலங்கை இன்னமும் தண்டிக்கப்படவில்லை. இன்று காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்கள் - பிரயோகிக்கப்படும் உத்திகளுக்கும் இதுவே முன்னுதாரணம்.” - என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மேலும், இத்தகைய பின்னணியில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல்திட்டம் இன்றியமையாதது. இது, இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி - உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்தவும் மிக அவசியமானது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

“உலகளாவிய ரீதியில் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய பல அட்டூழியங்கள் குறித்த ஞாபகங்கள், சில வருடங்களில் வேறு புதிய மீறல் சம்பவங்களால் மாற்றி எழுதப்படும். ஆனால், மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் அதனால் ஏற்பட்ட துயரம் என்பது முடிவற்றதாகும். தீர்வு அளிக்கப்படாத குற்றங்கள் அதனை ஒத்த எதிர்கால மீறல்களுக்கான முன்மாதிரியாகத் திகழ்கின்றன.

இலங்கை அரசால் 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது. இதன்விளைவாக ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஐக்கிய நாடுகள் சபையால் கண்டறியப்பட்டதன் பிரகாரம் இந்தப் போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் சட்டங்களுக்குப் புறம்பான விதத்தில் மனிதகுலத்துக்கு எதிராக மிகமோசமான குற்றங்கள் இழைக்கப்பட்டன. இருப்பினும், அவை இன்றளவிலே இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் சிலரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களுக்கான எந்தவொரு எதிர்விளைவும் இல்லாததன் காரணமாக இது சாத்தியமாகியிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை ஆட்சிப்பீடமேறிய அரசுகள் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதாக வாக்குறுதியளித்துவிட்டு, அதிலிருந்து விலகிச் செயல்பட்டு வந்திருப்பதன் மூலம், எதனை செய்தாலும் பின்விளைவுகளின்றி மீண்டுவிடலாம் என்பதைக் காண்பித்து வந்திருக்கின்றன. ஆகையால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறலைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன் இலங்கையால் நிகழ்த்தப்பட்ட சர்வதேச குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்குரிய ஆணையை தற்போது நடக்கும் கூட்டத்தொடரில் புதுப்பிக்க வேண்டும்.

இலங்கையில் சுமார் 26 வருடகாலமாக நீடித்த உள்நாட்டு போரில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் என்பன உள்ளடங்கலாக இரு தரப்பினராலும் மிகமோசமான மீறல்கள் - குற்றங்கள் இழைக்கப்பட்டன. இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற சில மாதங்களில் எஞ்சியிருந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களும் தமிழ் பொதுமக்களும் இலங்கை இராணுவத்தால் மிகக்குறுகிய பகுதிக்குள் சுற்றிவளைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்திய அதேவேளை, இலங்கை இராணுவம் மனிதாபிமான உதவிகள் உட்செல்வதைத் தடுத்ததுடன், குறித்த சில பகுதிகள்மீது வான் மற்றும் எறிகணை தாக்குதல்களை நடாத்துவதற்கு முன்னர் அவற்றை ‘யுத்த சூனிய வலயங்களாக’ அறிவித்தது. மருத்துவ சேவை வழங்கல்கள் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்டன. இலங்கையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்து, இன்னமும் தண்டிக்கப்படாமல் உள்ள இந்தச் சம்பவங்கள் இன்றளவிலே காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்களுக்கும் அங்கு பிரயோகிக்கப்படும் உத்திகளுக்குமான முன்னோடியாக உள்ளன.

ஜே. வி. பி. எழுச்சி மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான யுத்தம் என்பவற்றுடன் தொடர்புபட்ட விதத்தில் நாடளாவிய ரீதியில் இதுவரை சுமார் 20 மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் வேறு பணிகளின்போது தற்செயலாகவே கண்டறியப்பட்டன. அண்மையில், அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழியில் 1990 களில் இராணுவக் காவலின்கீழ் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என நம்பப்படும் 200இற்கும் மேற்பட்டோரின் எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இருப்பினும் போதிய தொழில்நுட்ப வசதிகள் இன்மை மற்றும் அரசியல் தன்முனைப்பு இன்மை போன்ற காரணங்களால் இதுவரையில் இலங்கையில் எந்தவொரு மனிதப் புதைகுழி தொடர்பிலும் விசாரணைகள் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல்திட்டம் இன்றியமையாதது. இது இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்துவதற்கும் அவசியமானது.” - என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பிரதிப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk